ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2012/29 - 2017 මාර්තු මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.03.30

*2012/29 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்***

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு பாரிய நகரம் மற்றும் மேற்கத்திய அமைச்சராகிய பாட்டலி சம்பிக்க றணவக்க ஆகிய நான், அட்டவணையில் (நிரல் I இல் குறிப்பிட்ட ஏற்கனவே பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளைத்தவிர்ந்த) அதன் நேரொத்த பகுதி II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லைகளும் வரையறைகளையும் கொண்டுள்ளதுமான பகுதியினை அபிவிருத்திக்கு பொருத்தமானதென அபிப்பிராயப்படு வதனால், அப்பகுதியினை நகர அபிவிருத்திப் பகுதியாக இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

பாட்டலி சம்பிக்க றணவக்க,
பாரிய நகரம் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சர்.

பாரிய நகரம் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சு,
17 மற்றும் 18 வது மாடிகள்,
"சுஹூறுபாய",
சுபுதிபுர வீதி,
பத்தரமுல்லை,
2017, மாச்சு 14.


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை I**

**ஏற்கனவே பிரகடனப்படுத்தப்பட்ட திஸ்ஸமஹாராமை நகர அபிவிருத்திப் பகுதியுடன் உள்ளடக்கி கங்காசிறிபுர கிராம அலுவலர் பிரிவினை பிரகடனப்படுத்தல்**

*நிரல் - I*

தென்மாகாணம், அம்பாந்தோட்டை மாவட்டம், கங்காசிறிபுர கிராம அலுவலர் பிரிவு இல. 4 இலான சகல காணிப்பகுதிகள், நிரல் II இல் குறித்துரைக்கப்பட்டவாறு எல்லைகள் மற்றும் வரை யறைகளாலும் சூழப்பட்டதுடன், இலங்கையில் கரையோர வலயம் என 1982.12.17 ஆந் திகதிய 223/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் பிரகடனப்படுத்தப் பட்ட பகுதி, 1986.03.14 ஆந் திகதிய 392/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் சேர்க்கப்பட்ட பகுதி 1987.07.24 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட "கம்முதாவ" கதிர்காமப் பகுதியான "கிராம எழுச்சி" கதிர்காமம் 29.12.1992 ஆந் திகதிய 747/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட ருகுனுபுர ஆகிய பகுதிகளையும் உள்ளடக்கும்.

*நிரல் - II*

**வடக்கு :**
கெமுனுபுர கி. அ. பி. இல. 38 இனது தெற்கு எல்லைப் புள்ளியிலிருந்து, தென்கிழக்கே தெபறவேவ கி. அ. பி. இல. 37 இனது தெற்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது, மதவெலன கி. அ.இ.பி இல. 2 இனது வடக்கு மற்றும் மேற்கு எல்லைகள் சந்திக்கும் புள்ளியினை அடையும் வரை.

**கிழக்கு :**
கடைசியாக குறிப்பிட்ட புள்ளியிலிருந்து தென்மேற்கே மதவெலன கி. அ. பி. இல. 2 இனது மேற்கு எல்லை யோரமாகவும் அத்துடன் தென்கிழக்கே சேன புர கி. அ. பி. இல. 6 இனது மேற்கு எல்லை யோரமாகவும் கீறப்பட்ட கோடானது றபர்வத்தை கி. அ. பி. இல. 7 இனது வடக்கு எல்லையினை அடையும் வரை.

**தெற்கு :**
கடைசியாக குறிப்பிட்ட புள்ளியிலிருந்து வடமேற்கே இறபர்வத்தை கி. சே. பி. இல. 7 இனது வடக்கு எல்லை யோரமாக கீறப்பட்ட கோடானது மொலக்கேபுபத்தன கி. அ. பி. இல. 34 இனது கிழக்கு வல்லையினை அடையும் வரை.

**மேற்கு :**
கடைசியாக குறிப்பிட்ட புள்ளியிலிருந்து வடமேற்கு மொலக்கேபு பத்தன கி. அ. பி. இல. 34 இனது கிழக்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது பொல்கஹா வெலன கி. அ. பி. இல. 36 இனது தெற்கு எல்லையினை சந்திக்கும் வரை; பின்பு வடகிழக்கே பொல்கஹவெலன கி. அ. பி. இல. 36 இனது தெற்கு எல்லை யோரமாக கீறப்பட்ட கோடானது அதே கி. அ. பி. இல. 36 இனது கிழக்கு எல்லையினை அடையும் வரை; பின்பு, அதே கி. அ. பி. இல. 36 இனது கிழக்கு எல்லையோரமாக வட மேற்கே கீறப்பட்ட கோடானது தொடக்கப்புள்ளியினை அடையும் வரை.

4 - 372

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.